(அஓ) கதிராமங்கலம், போராட்டக்காரர்கள், விடுதலை மற்றும் வழக்குகளைத் திரும்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட கதிராமங்கலத்தில் விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்ற சூழ்நிலையில், அவர்கள்மீது போடப்படுள்ள வழக்குகளை வாபஸ் பெறக் கோரியும், காவல் துறையை திரும்பப் பெறக் கோரியும், அவர்களை விடுதலை செய்யக் கோரியும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். திரு. ராஜாராமன் மற்றும் திரு. இராமமூர்த்தி ஆகிய இருவரும் கடந்த 3 தினங்களாகத் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை விடுதலை செய்யக் கோரி எங்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். டெல்டா மாவட்டத்தைச் சார்ந்த 3 மாண்புமிகு அமைச்சர்களும் இந்த அவையில் இருக்கின்றனர். எனவே, இந்த அவையின் கவனத்தை ஈர்க்கும் வகையில், அவர்கள்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் பெறக் கோரியும், காவல் துறையை திரும்பப் பெறக் கோரியும், விடுதலை செய்யக் கோரியும், விவசாய நிலங்களைப் பாதுகாக்கக் கோரியும், பேராசிரியர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*

முற்பகல் 10–30

(அஔ) விழுப்புரம், உளுந்தூர்பேட்டை பகுதிகளில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு விதி 110–ன்கீழ் உளுந்தூர்பேட்டை மற்றும் விழுப்புரம் ஆகிய பகுதிகளில் 5 பேரூராட்சி, ஒரு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு,*